34—

சொந்தக் கட்டடம்

***34851—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சங்கரன்கோவிலில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகம் சங்கரன்கோவில் நீதிமன்றக் கட்டட வளாகத்திலுள்ள வாடகையில்லா அரசுக் கட்டடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியை மீட்டுத் தந்த இதய தெய்வத்திற்கு காவேரிக் கரையிலே கிடைத்தது வெற்றி மகுடம். அந்த வெற்றியை நிகழ்த்திக் காட்டியது மாண்புமிகு அம்மா அவர்கள் எழுதிய ஒரு கடிதம். 2016-ல் 234 தொகுதிகளும் அம்மாவிற்கே என்பதற்கு இதுவே அச்சாரம். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று இந்த அவையில் எதிர்க்கட்சிகளே இல்லை என்பது நிச்சயம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எஃகுக் கோட்டை. அதை யாராலும் அசைக்க முடியாது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகமானது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதேபோல, குருவிகுளம், மேலநீலிதநல்லூர் பகுதியிலுள்ள அலுவலகங்களும் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றன. இதற்காக அரசு 2,400 ரூபாய் வாடகை வழங்கி வருகிறது. ஒவ்வொரு நேரமும் அவர்கள் வாடகைக் கட்டடத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலில் செயல்படுகின்ற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினுடைய அலுவலகம் சங்கரன்கோவில் வட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம், நீதிமன்றத்திலிருந்து ராஜபாளையம் செல்லும் மெயின் ரோட்டில் கிருஷ்ணா கல்யாண மண்டபம் அருகில் சார்நிலைக் கருவூலம் எதிர்ப்புறம் கட்டி முடிக்கப்பட்டு ஜூன் 2015-ல் திறக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்பின்னர், தற்போது சங்கரன்கோவிலில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகம் சங்கரன்கோவில் நீதிமன்ற வளாகக் கட்டடத்தில் உள்ள வாடகையில்லா அரசுக் கட்டடத்திற்கு மாற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் அங்கன்வாடியிலே இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு 13 வகையான கலவை சாதங்களையும், அதேபோல, இதுவரை யாரும் வழங்காத அளவிற்கு பிள்ளைகளுக்கு ஒரேமாதிரியான uniform-களையும், bag-களையும்,

விளையாட்டுப் பொருள்களையும், இப்போது அம்மா அவர்கள் சிறுதானிய பிஸ்கெட்களையும் வழங்கியிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் அவற்றையெல்லாம் பயன்படுத்தி மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர். அதேபோல, தனியார் பள்ளிகளிலே 50,000 ரூபாய், ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்து Pre-K.G., U.K.G. படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு அம்மா அவர்கள் அங்கன்வாடி மையங்களிலே தரமான கல்வியை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி உடனடியாக வாடகையில்லா கட்டடத்திற்கு அதை மாற்றித் தர கேட்டுக்கொள்கிறேன். இதேபோல, மேலநீலிதநல்லூர், குருவிகுளம் பகுதிகளிலுள்ள அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதையும் கூறி, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என்பது முழுக்க முழுக்க மத்திய அரசின் திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசினால் வாடகையாக ரூபாய் 3,500 மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதை வைத்துத்தான் இப்போது தமிழ்நாட்டிலே அனைத்து இடங்களிலேயும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. 434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்களில், 230 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும், 204 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்கள் வாடகையில்லாக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதிகளும் அடங்கும். சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசின் திட்டத்திலே நிதி இல்லை. இருந்தாலும், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கக்கூடிய அரசு, அரசுக்குச் சொந்தமான

நிலங்களைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியை வைத்துக்கொண்டு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

35—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

***35153—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது பற்றி தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி காத்து, தமிழ் இனம் காத்து, தமிழர்தம் உரிமைகளைக் காத்து நிற்கும் தமிழர் குல தெய்வம், உலகத் தமிழர்களுடைய ஒப்பற்ற தலைவர், சூழ்ச்சிகளைச் சிதறடிக்கும் சிங்க நிகர் தலைவி, 24-2-2015 அன்று 67-வது பிறந்த நாள் காணும்